
# நற்றமிழ்க்குடில்



மாணவ இலக்கிய மின்னிதழ்

டிசம்பர் 2024
குடில் 7
விருந்து 23


**தமிழ்த்துறை**
சோகா தமிழ்ப் பேரவை
வெளியீடு

**சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி**
சேது பாஸ்கரா நகர்
மாதனாங்குப்பம்
சென்னை 600 099.

044-26863177
9677717455, 9677717456

sokatamilavai2023@gmail.com
sokaikeda2000@gmail.com

# நற்றமிழ்க்குடில்

**மாணவ இலக்கிய மின்னிதழ்**

## தமிழால் தழைக்கும் உலகு

குடில் 7 - விருந்து 23 - டிசம்பர் 2024

**தமிழ்த்துறை**

**சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு**

**சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி**

**சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.**

நற்றமிழ்க்குடில்

# நற்றமிழ்க்குடில்

ஆசிரியர் குழு : வி. மாரிகவிதா, முதுகலைத்தமிழ், முதலாமாண்டு
அ. உமா மகேஸ்வரி, இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு
ஏ. ரம்யா, இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு
கா. சுவாதி, இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு

ஆலோசனைக் குழு : டாக்டர் சேது குமணன், கல்லூரித் தலைவர்
முனைவர் மீரா முருகேசன், கல்லூரி முதல்வர்
முனைவர் கண்மணி சுப்பிரமணியன், கல்லூரித் துணை முதல்வர்
முனைவர் தே. இராணி எலிசபெத், தமிழ்த்துறைத் தலைவர்
தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்

வெளியீடு : தமிழ்த்துறை
சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு
சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.

*Blog : sokatamil blogspot.com*
*Facebook : Soka Tamil Avai*
*Youtube : Sokatamilavai*
*E.mail : sokatamilavai2023@gmail.com*

# நற்றமிழ்க்குடில்

## தமிழால் தழைக்கும் உலகு

## மாணவ இலக்கிய மின்னிதழ்

## குடில் 7

## விருந்து 23

டிசம்பர் 2024

# உள்ளே....

## மகாகவி பாரதியார்

## மாணவியர் படைப்புகள்

## துறை நிகழ்வுகள்

## பாரதியார் சிறப்பிதழ்


பாரதியாரின் நினைவு நாள் மற்றும் பாரதியாரின் பிறந்த நாள் ஆகிய இரண்டு நாட்களில் கல்லூரியின் தமிழ்த்துறை, துறைகளுக்கிடையேயான கவிதைப் போட்டியை நடத்தியது.

கவிதைப் போட்டிகளில் கலந்துகொண்டு, வெவ்வேறு தலைப்புகளில் மாணவியர் கவிதைகளை எழுதினர். சிறந்த கவிதைகளுக்குப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

மாணவியரின் கவிதைகள் தொகுக்கப்பெற்று, டிசம்பர் திங்கள் நற்றமிழ்க்குடில் மின்னிதழில் வெளியிடப்படுகிறது.

# மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் படத்தை ஆரிய என்ற பாஷ்யம் வரைந்தார். இவர் ஒரு சிறந்த ஓவியர் மற்றும் சிற்பி. சென்னை அரசாங்கம், பாரதியாரின் படத்தை ஏற்றுக்கொண்டு, இன்றளவும் அதைப் பயன்படுத்தி வருகிறது.



ஓவியம்: பா. சந்தியா
கணினிப் பயன்பாட்டியல், இரண்டாமாண்டு

பாரதியாரின் பாடல்களை முதன்முதலில் மக்களுக்கு அறிமுகம் செய்தவர் பரலி சு. நெல்லையப்பர். பாரதியாரின் பாடல்களை முதன்முதலில் வெளியிட்டவர் கிருஷ்ணசாமி ஐயர். பாரதியார் பிறந்த ஊரான எட்டயபுரத்தில் அவருக்கு மணி மண்டபமும், உருவச் சிலையும் அமைக்கப்பட்டுள்ளது.

எட்டயபுரத்திலும், சென்னை திருவல்லிக்கேணியிலும் பாரதியார் வாழ்ந்த வீட்டினை, பாரதியார் நினைவு இல்லமாக மாற்றி அதை இன்றுவரை தமிழ்நாடு அரசு பராமரித்து வருகிறது. அதோடு அங்கு பொதுமக்கள் சென்று பார்வையிடும் வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.





**எட்டயபுரத்தில் அமைந்துள்ள பாரதியார் பிறந்த வீடு**

## இந்தியா

## வார இதழ்



இந்தியா.

"INDIA"

சனிக்கிழமைதோறும் வெளியாகும்.

t de la première page du journal *India* publié par Bâradi à Pondic



## பாண்டிச்சேரியில்

## பாரதியார் வாழ்ந்த

## இல்லம்

எட்டையபுர அரண்மனை






பாரதியார் தமிழாசிரியராகப் பணியாற்றிய மதுரை சேதுபதி பள்ளி. அன்று பாரதியார் பெற்ற மாதச் சம்பளம் 17 ½ ரூபாய்



பாரதியாரின்
குடும்பம்

முதன் முதலாக அரசியல்
கார்டூன்களைப்
பயன்படுத்தியவர்
பாரதியார்



பாரதியாரின் பெயரில் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் கீழ் இயங்கும் தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம் ஆண்டுதோறும் பாரதியார் நெறி பரப்பும் தகமையாளர்களில் ஒருவருக்கு, பாரதியார் விருது வழங்கப்படுகிறது. தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறை அரசாணை எண்.32, நாள் 08-12-1997 மூலம் 1997 ஆண்டிலிருந்து இவ்விருது வழங்கப்படுகிறது. 1997ஆம் ஆண்டில் ரூபாய் இருபதாயிரம் பணமுடிப்பும் தகுதியுரையும் வழங்கப்பட்டது. 1998ஆம் ஆண்டிலிருந்து ரூபாய் ஒரு இலட்சம் பணமுடிப்பும் எட்டு கிராம் அளவிலான தங்கப்பதக்கமும் வழங்கப்படுகிறது.

பாரதியின் 100ஆவது நினைவு நாளை ஒட்டி முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கவிஞரும் சுதந்திரப் போராட்ட வீரருமான பாரதியின் நினைவு நாளை மகாகவி நாளாகக் கொண்டாட அறிவித்தது. அதோடு சேர்த்து 14 திட்டங்களை அரசு அறிவித்துள்ளது.

# மகாகவி நாள் போட்டிகள்

பாரதியாரின் நினைவு நாள் மகாகவி நாளாகக் கொண்டாடப்படுகிறது.



சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியின் தமிழ்த்துறை சோகா தமிழ்ப் பேரவையால் 11.09.2024 அன்று பாரதியின் பன்முகப் பார்வை எனும் தலைப்பில் துறைகளுக்கு இடையேயான கவிதைப்போட்டி நடத்தப்பெற்றது.

போட்டியில் பங்கு பெற்ற மாணவியரின் கவிதைகள் இவ்விதழில் இடம்பெறுகின்றன.

# மாணவியர் படைப்புகள்

## நற்றமிழ் தலைவன்

நேர்கொண்ட பார்வையிலே
நேர்மையான பாதையிலே
நெஞ்சை நிமிர்த்தும் பாரதியே!

தமிழ்ப்பால் பருகி
தரணியை எழுத்தால் சீரமைத்த
சிறந்த கவிஞனே!

செப்டம்பர் 11, 1921
அன்று தமிழ் எரிந்து கொண்டிருந்தது
நெருப்பினால் அன்று
இவன் மறைந்த கருப்பு நாள் என்று!

இன்னும் பெண்ணடிமை கண்டு

வன்கோபம் கொண்டு

மண்அடியே எரிந்து கொண்டிருக்கிறான்

புரட்சி கவி...

அதன் தாக்கம் தான்

சூடானது புவி...

பல இதழையும் படைப்பையும்

உன்னில் கண்டேன்...

இனி வரும் தலைமுறையைத்

தமிழால் காப்பேன்...

தமிழ்க் கடவுள் முருகன் அவன்

நற்றமிழை வகுத்த தலைவன் இவன்

யானையே சாய்த்தது

தமிழர்களின் ஏணியை...

எட்டயபுரத்தில் பிறந்து

யாரும் எட்டாத புகழைப் பெற்றவன்!

வாழ்த்துகிறேன் உன் புகழை

வணங்குகிறேன் உன் தமிழை!

**சா. பவித்ரா**

**முதுகலைத் தமிழ், இரண்டாமாண்டு**

## நம் மகாகவி

அழகு தமிழுக்குச் சொந்தக்காரர்!

ஆனந்தச் சுதந்திரம் பாடியவர்!

இந்தியா இதழை நடத்தியவர்!

ஈர நெஞ்சம் கொண்டவர்!

உணர்வில் தமிழைக் கலந்தவர்!

ஊக்கம் வளர்த்த மகாகவிஞர்!

எழுச்சி ஊட்டியப் பேச்சாளர்!

ஏற்றம் தந்த இதழாளர்!

ஐயம் நீக்கிய ஆய்வாளர்!

ஒற்றுமை ஓங்கிட உழைத்தவர்!

ஓதலின் அருமை உணர்த்தியர்!

ஔவைபோல் ஆத்திச்சூடி எழுதியவர்!

நம் மகாகவி பாரதியார்!

**விண்ணரசி. மை**

**முதுஅறிவியல் கணிதவியல், முதலாமாண்டு**

## மீண்டும் பிறந்து வா!

பாரதத் தாய் பெற்றெடுத்த மகாகவியே!

எட்டயபுர மண்ணிலே பிறந்த வீரத்தமிழனே!

எட்டுத்திக்கும் தமிழ் மணம் பரப்பிய

பன்மொழிப் பாவலனே!

கருத்துப் படங்களை அறிமுகம் செய்த

புதுமையாளனே!

மீசைக் கவிஞனே! முண்டாசு வீரனே!

எட்டயபுரத்துக் கவியே!

நெற்றியில் வீரத்திலகமிட்ட வீரத்திருமகனே!

இருவிழிப் பார்வையில் கனலாய் எரிப்பவனே!

உன் கவி கேட்டுப் புகழாத மனிதரில்லையே!

அகண்ட அகிலமும் உன் புகழ்பாடும்!

தமிழும் உன் கவிக்குத் தலைவணங்கும்...

எழுத்துகளின் சக்கதியால் பெண்விடுதலையை

உண்மையை உலகறியச் செய்த மகாகவியே!

சுதந்திர வேட்டையை நாடெங்கும்

பரப்பிய கவிமகனே!

வசனக் கவிதைக்கு அடித்தளமிட்டவரே!

தமிழை வளர்த்து தமிழால் உயர்ந்தவரே!

அச்சம் தவிர்த்து எழுத்துகளால் வீரத்தை

விதைத்த அஞ்சா நெஞ்சம் கொண்டவரே!

புவி வாழ்வைத் துறந்து வானுலகில் கவி
படைக்கச் சென்று விட்டாயோ! மீண்டும்
பிறந்து வா!

**ச. பூஜா**

**இளங்கலைப் பொருளாதாரம், இரண்டாமாண்டு**

## பாரதியின் பன்முகப் பார்வை

முறுக்கு மீசைக்காரா! முண்டாசு மன்னா!
வீரத்திற்குச் சொந்தக்காரராம் நம் பாரதி!
இளம் பருவத்திலே தமிழை அள்ளி முடிந்திட்ட
அருமை கவிஞராம் நம் பாரதி!

வெள்ளையன் கொடுமையை விரட்டி!
விடுதலை தீயை நாடெல்லாம் ஏற்றி!
சாதி வெறியினைத் தமிழ் சாட்டைக் கொண்டு
விரட்டிய பாரத தீயே! பாரதி!

நீ முண்டாசு இறுக்கி!
மீசையை முறுக்கி
எழுதுகோலைத் தீட்டி நீ எழுதிய போதெல்லாம்
தமிழ் உலகம் அனல் மூண்டது!

தமிழ் கவிதை வரிகளால் மக்கள் மனதைக்
கொள்ளைக் கொண்டவரே! இது நியாயமா!
அடிமைத் தனம் பிடிக்காது என்ற உன் கவிதை வரிகளுக்கு
என்னை அடிமையாக்கினாயே! இது நியாயமா!

எழுதுகோலின் சக்தியை உலகறியச் செய்தவரே!
எழுச்சி மிக்க நாயகனே!
கவிஞனாய்! சுதந்திரப் போராட்ட தியாகியாய்!
பன்முகம் கொண்டவரே!
பார் போற்றும் மகா கவியே!

**ரா. சத்யா**

**முதுகலைத் தமிழ், இரண்டாமாண்டு**

## அகரம் முதல் பாரதி புகழ்

அன்பு என்ற அறநெறி கொண்ட அழகனே!

ஆங்கிலேயரைத் தமிழ் மொழியினால் வென்ற ஆகாயச் சூரியனே!

இன்னிசைப் பாடலில் நீங்காத இடம் பிடித்த இனியவனே!

ஈடு இணையில்லாத ஈகை கொண்ட வல்லவனே!

உறுதியான நெஞ்சம் படைத்த தலைமகனே!

ஊர் போற்றும் கவிதைகள் தந்த கவிதைத் தலைவனே!

எண்ணில்லா துன்பம் போக்கும் சொற்பொழிவு மன்னவனே!

ஏட்டில் நீ எழுதிய சுவடிகள் சுடர்ஒளியே!

ஐயமின்றி சரித்திரம் படைத்த தளபதியே!

ஒற்றுமையின் வலிமையை உணர்த்திய நாயகனே!

ஓர் புதிய புரட்சியை வித்திட்ட புலவனே!

ஔஷதமாய் தமிழுக்குக் கிடைத்த ஆசானே!

உன் வழியை

அஃதைப் போற்றியே காத்திடுவோம்....

**சே. ஈஸ்வரி**

**முதுகலை ஆங்கில இலக்கியம், முதலாமாண்டு**

## பாரதிக்குக் கவிமாலை

பா புனைந்தான் பாப்பாவிற்கு
ஓடிவிளையாடச் சொல்லி
பாருக்கு எழுதினான் அச்சமில்லையென
உச்சி மீது வானிடிந்து வீழும் போதும்
கண்ணம்மாவின் காதலைச் சொன்னான்

காற்று வெளியிடை கண்ணம்மா என்று
அவள் காதலை எண்ணி களித்தான்
காதல் காதல் காதல்
காதல் போயின் சாதல் என்று
குயில் பாட்டில் கூவினான்

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோமென
பெண்ணியம் பேசினான்
காணி நிலம் வேண்டுமென்று
கூட்டுக் களியினிலே கவிதைத் தரவேண்டுமென
பராசக்திக்கு விண்ணப்பித்தான்

பார் ரதி இன்று பார் போற்றும்
பாரதியின் நினைவு நாளாம்!

தீராத விளையாட்டுப் பிள்ளை
தெருவில் பெண்களிடத்து
ஓயாது தொல்லை என்று
கண்ணனின் குறும்பை ரசித்தான்

வந்தே மாதரம் என்போம் என்ற
மந்திரத்தோடு மாநிலத் தாயை
வணங்கிடச் சொன்னான்

பாருக்குள்ளே நல்ல நாடு
நம் பாரதநாடு என்று
சொந்தம் கொண்டாடி நீர் தான் புதல்வன்
இந்நினைவை அகற்றாதீர் என்று
நெஞ்சில் நிறுத்தினான்

செந்தமிழ் நாடு எனும் போதினிலே
இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே
மொழியின் மேன்மையை உணர்த்தினான்

ஜாதிகள் இல்லையடி பாப்பா என்ற
பாவை பாப்பாவின் மனதில் பதியும் படி
அவன் எழுதியதை பார் ரதி

இன்று அவன் நினைவு நாளாம்
போற்றுவோம் நாமும் இன்று
செந்தமிழ் கவிமாலை கோர்த்து

**ரா. அஞ்சனா**

**முதுஅறிவியல் கணினியியல், இரண்டாமாண்டு**

## பன்முகப் பார்வையில் பாரதி

புத்துலகின் பேரரசு
எழுத்துகளை எல்லாம் ஆண்டிட வந்த
எழுத்துலகின் எசமானே!
உன் எழுத்தாட்சி பெருமைக்கு

உன் எதார்த்த நடையே எடுத்துக்காட்டு
என்பேன்…

சாதியின் வழியை
அடைத்திட வந்த
சமத்துவத்தின் சாயலே!

நீ கண்ட சாதியப் போருக்கு
நீ கொண்ட சீரிய தமிழே
பேராயுதம் என்பேன்…

பெண்ணியம் பேசி
புதுமைகள் கண்ட
புத்துலகின் பேரரசே!

உன் பெண்ணுரிமைப் பேச்சுக்கு
உன் புதுமைத் தமிழே பிராணம்
என்பேன்…

தீண்டாமை திரளைக் கலைத்திட வந்த
திராவிடத்தின் தலைவனே!
நீ கண்ட தீண்டாமை ஒழிப்புக்கு
நீ கொண்ட திரிபில்லா தமிழே!
திறனானது என்பேன்...
வேற்றுமையின் உயிரை
வென்றிட வந்த வேதமொழி
வேந்தனே!
உன் வேற்றுமையின் எதிர்ப்புக்கு
உன் வீரமான தமிழே
வேலானது என்பேன்...
நாட்டைப் போற்றும்
நற்றமிழ் இசையை
நாளும் கொடுத்த நன்கொடையே!
நீ கொண்ட நாட்டுப் பற்றுக்கு
நீ கண்ட நறுந்தமிழ் பாட்டே
நிழலானது என்பேன்...

**பா. லோகேஸ்வரி**
**முதுகலைத்தமிழ், இரண்டாமாண்டு**

## மனதில் வாழும் பாரதி

சுதந்திரக் கொடி பறக்க

பெண்களின் உரிமையை உயர்த்த

மனிதநேயத்தை வளர்க்க

இயற்கையைப் போற்ற

இளைஞர்களின் நற்பண்பை வளர்க்க

அச்சத்தை அகற்ற காதலில் மிதக்க

நகைச்சுவையில் சிரிக்க சமத்துவமாய் நடக்க

விதியை மாற்ற அரசியல் அமைக்க

தலைமுறையை வளர்க்க

காற்றின் மகிமை அறிய

பறவைகளின் அழகை ரசிக்க

மழை பொழிய விவசாயம் செழிக்க

கலாச்சாரம் காக்க ஆன்மீகம் அறிய

சுயமரியாதை உணர்த்த

எழுத்தில் எழுப்பிய

பன்முகப் பார்வையுடையவரே

சிவகவியே! நீ என்றென்றும்

எல்லோர் மனதிலும்

வாழ்க! வாழ்க!

**அபிராமி. க**

**இளமறிவியல் கணினி அறிவியல், முதலாமாண்டு**

## அர்பணித்த பாரதி

தமிழின் ஆசானாய்

வாழ்வின் விளக்கு...

தமிழனாய் என்றும்

நடையினில் மிடுக்கு...

நாளிதழ் ஆசானாய்

புரட்சியைத் தொடக்கி...

அந்நிய அரசுக்கு

சவுக்கடி கொடுத்து...

அர்பணித்தார் பாரதி

தம் வாழ்வை!

**திவ்யா. கே**

**இளம் வணிகவியல், இரண்டாமாண்டு அ பிரிவு**

## புறப்படு புகழ் பரப்ப…

மண்ணில் பூத்த மலரை

மனம் உள்ள வரை சுவாசி

உன் மனதில் பூத்த பாரதியை

உயிர் உள்ள வரை நேசி

பார்போற்றும் பாரதியை

பல படைப்புகளைப் படைத்த படைப்பாளியே

பாமர மக்களுக்காக

எழுத்தால் புரட்சி செய்த புரட்சியாளனே!

புறப்படுவோம் இவன் புகழைப் பரப்ப…

**இ. புவனேஷ்வரி**

**இளம் வணிகவியல், இரண்டாமாண்டு அ பிரிவு**

## சூரியன்

புரட்சி செய்த புரட்சியாளனே

உன் புரட்சிப் புகழைப்

பரப்ப இப்பிறவி போதாது...

கவிஞனே! கவியரசனே!

அகிலத்தின் அரசனே!

உன்னையும் உன் தமிழையும் வணங்குகிறேன்...

வட்ட முகத்தில் ஒரு நிலா

தமிழ்நாட்டிற்காகப் போராடி மறைந்தது

மீண்டும் உதித்தது மக்களின் உள்ளத்தில்

அழியாத சூரியனாய் அவர் கவிதைகள்...

**மு.த. ஹரிணி**

**இளம் வணிகவியல் இரண்டாமாண்டு, அ பிரிவு**

## பாரதி யார்?

பாரதியார் ஒரு விடுதலை வீரர்

பாரதியார் ஒரு சமூகத் திருத்தவாதி

பாரதியார் இளைஞர்களின் எழுச்சியாளர்

பாரதியார் பெண்களுக்கு வீரத்தை ஊட்டியவர்

பாரதியார் சமூகச் சிக்கல்களை நீக்கியவர்

பாரதியார் இளைஞர்களிடம் நன்னம்பிக்கையை விதைத்த

பாரதியார் குழந்தைத் திருமணத்தைப் புறக்கணித்தவர்

பாரதியார் பெண்அடிமையை வெறுத்தவர்

பாரதியார் பெண்உரிமையை மீட்டுத்தந்தவர்

பாரதியார் இளைஞர்களை எழுச்சி மிக்கவராக்கியவர்....

**செ. பவித்ரா**

**முதுகலைத் தமிழ், முதலாமாண்டு**

## பாரதியார் பிறந்தநாள் விழா - போட்டிகள்

கல்லூரியின் 25ஆம் ஆண்டு வெள்ளி விழாவின் பகுதியாக, தமிழ்த்துறை சோகா தமிழ்ப்பேரவையில் பாரதியார் பிறந்தநாள் விழா நடைபெற்றது. இவ்விழாவை முன்னிட்டு 11.12.2024 அன்று



துறைகளுக்கு இடையேயான கவிதை மற்றும் ஓவியப் போட்டிகள் நடைபெற்றன. அனைத்துத் துறைகளைச் சேர்ந்த மாணவியர் போட்டிகளில் கலந்துகொண்டனர்.



- எங்கெங்கு காணினும் சக்தியடா
- பெண்மை வெல்க என்று கூத்திடுவோமடா
- மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்
- மனதில் உறுதி வேண்டும்

இன்னும் பிற தலைப்புகளில் எழுதப்பட்ட மாணவியரின் கவிதைகள் இவ்விதழில் இடம்பெறுகின்றன.



## மனதில் உறுதி வேண்டும்

ஏழ்மையினை எதிர்த்து வாழ
எதிர்ப்புகளைக் கடந்து வாழ
மனதில் வேண்டும் உறுதியே

மதிப்புகளை நாளும் சேர
மேகங்களை அடக்கி ஆள
மனதில் வேண்டும் உறுதியே

பிரிவுகளைப் புரிந்து செல்ல
புதுமைகளை அறிந்து கொள்ள
மனதில் வேண்டும் உறுதியே

ஆக்கங்களை வலிமையாக்க
அதிகாரத்தின் வலிமை நீக்க
மனதில் வேண்டும் உறுதியே

கனவுகளைக் காலம் வெல்ல
நினைவுகளில் நாளும் செல்ல
மனதில் வேண்டும் உறுதியே

**பா. லோகேஸ்வரி**
**முதுகலைத் தமிழ், முதலாமாண்டு**

## மன உறுதி

உள்ளத்தில் உறுதி எழுந்ததோ
விழிகளில் உற்சாகம் பரப்பினதோ?
மலர்களும் காற்றும் வழி காட்ட
அறிவின் ரீதியில் நான் சென்றேன்

புதிதாய் தொடங்கும் ஒவ்வொரு நாளும்
என்னைச் சவால்களாய் உலுக்கியது
ஆனால் நான் போகவில்லை அந்த வழியில்
சரிதான் என நிலைத்தேன்

இருட்டின் இடங்களில் தெரியும் ஒளி
பிரச்சினைகளின் தடையில் ஒரு பசுமை
எல்லாவற்றையும் எதிர்கொண்டு நிற்பேன்
என் மன உறுதி என் வழிகாட்டி

சந்தோஷம் தனிமையாகத் தழைத்தாலும்
துன்பம் இடைவிடாது வந்தாலும்
நான் மனதில் உறுதியுடன் தாங்கி
எப்போதும் மேலே எழுந்தே போகிறேன்

உலகின் ஆற்றலுக்கும் நான் கட்டுப்பட்டேன்
என் வழி நான் தேர்ந்தெடுத்த பாதை
தூண்டல்களை இழந்ததால் கூட
மன உறுதி என் அருகில்

**வர்ஷிதா. வி**

**இளம் வணிகவியல், இரண்டாண்டு**

## தைரியம்

மனிதனின் உள்ளத்தில் தைரியம் என்ற
விதையை விதைக்க வேண்டும்
ஒவ்வொரு மக்களின் உள்ளத்திலும்
எண்ணத்திலும் புதைந்திருக்கும்
திறமைகளும் விதைதான்

நாம் திறமை நம்பிக்கை என்ற விதியை
மனதில் விதைத்தால்தான்
வாழ்க்கையில் எட்டாத உயரத்தை அடைய முடியும்

உன் மனதில் ஆயிரம் கஷ்டங்கள் இருக்கலாம்
கஷ்டத்தின் எல்லை உன் படிப்பு
உன் படிப்பு உன் கையில்

படிப்பு என்ற ஆயுதம் இருந்தால் உன்னால்
உலகத்தை வெல்ல முடியும்
இல்லையேல் உலகம் உன்னை நசுக்கிவிடும்

மனதில் தைரியத்தை வளர்த்துக் கொள்

இந்த உலகை வெல்ல

மனதின் தைரியம் ஒன்றே அனையா விளக்கு

**திவ்யா. என்**

**இளங்கலை ஆங்கிலம், மூன்றாமாண்டு**

## எங்கெங்குக் காணினும் சக்தியடா

மாதர் தம்மை இழிவு செய்யும்

மடமையைக் கொளுத்துவோம்

என்றே கூறுவோர் தம்மை

புகழ்ந்து திகழும் வானம்

நன்மை செய்யும் சூரியனாய்

மாதர் உயர்த்தும் மொழியாய் விளங்கிடுவோம்

மதி நிறைந்த ஜீவனாக

மெல்லிய காதல் நெஞ்சங்களான
மங்கையின் கரங்களும் தன்னால்
மக்கள் முன் உயர்ந்திடும்

ஆகா மடமைகள் மடிந்திடவே
அறிவுகள் மீண்டும் எழுந்திடவே
அழகு சொல்லி இழிவு செய்யும்
அமைப்பைச் சீரமைப்போம் நாம்

மறுக்காதீர்கள்
அதிகாரத்தின் வேர்கள் மட்டும் இல்லையடி
மனித நட்பில் மலர்கின்ற
அன்பும் அருமையாகவே வளரும்

தன் அடையாளத்தை
தானே அழிக்கும் அவலமென்ன
உன் அடையாளம் காப்பாய்
தாழ்ச்சி எண்ணம் நீங்கும்

கண்ணியமே ஆயுதமாக

புதிய பாதை அமைப்போம்

**சகியா பீவி. கே**

**கணிணிஅறிவியல், முதலாமாண்டு**

**பாரதி**

எண்ணிய முடித்தல் வேண்டுமென

விதை விதைத்த கவிஞனே!

எழுத்தால் எழுச்சியைக் கொண்ட

தந்தை எழுத்தாளனே!

எண்ணத்தில் வீரத்தை விதைத்த

வித்தகனே!

தமிழ் எழுத்தைக் கொண்டு

தரணியை மாற்றி அமைத்த

தமிழ் பித்தனே!

வார்த்தையால் வாழ்க்கையை

மாற்றிய தமிழ் வள்ளலே!

கோழைத்தனத்தை உடைத்து
உயர்ந்த எண்ணத்தை கொடுத்த
தமிழ் வாத்தியே!
பயத்தை உடைத்து
இனிமையான பயணத்தைத் தந்த
பாரதியே நீர் வாழ்க
எழுத்து எண்ணத்தில்
எல்லாரும் அழகே!

**ஆ. நிர்மலா**
**முதுகலைத் தமிழ், இரண்டாம் ஆண்டு**

## எங்கெங்கும் காணும் சக்தியடா!

பாரதி கவிதை புவி அறியும்
ஆண் அண்டமும் அகிலமும் தலை வணங்கும்
பெண்ணை பொன் என மதித்தவனே
பாக்களைப் பாடலில் விதைத்தவனே
மொழிக்குள் ஆயுதம் வைத்தவனே
கலையைக் கவிகளில் சொன்னவனே

சாத்திரம் பேசும் சூத்திரமே

சமுத்திரம் போற்றும் சாகசமே

பொன்னும் பெண்ணும் ஒன்றென்றார்

மானம் நமக்கு பெரிது என்றார்

எங்கு காணினும் சக்தியடா!

எதிலும் பாரதி நுட்பமடா!

**இரா.சத்யா**

**முதுகலைத் தமிழ், இரண்டாம் ஆண்டு**

## மனதில் உறுதி வேண்டும்

மனதில் உறுதி வேண்டும்

மலையையும் மடக்கும் சக்தி வேண்டும்

தடைகள் ஏறிச் செல்லும் தைரியம் வேண்டும்

தோல்வியிலும் துணிவாய் நிற்கும் நம்பிக்கை வேண்டும்

வாழ்க்கை ஒரு போர்க்களம், போராடத் தயார் ஆகு

முயற்சி என்ற ஆயுதம் கையில் கொண்டு நேருக்கு நேர் போ!

**செ. திரிஷா, கணினி அறிவியல், முதலாமாண்டு**

## பெண்

மகளாய் பிறந்தவளே

மங்கையாய் வளர்ந்தவளே

இளம் பெண்ணாய் மகிழ்ந்தவளே

தாய்மையில் சிறந்தவளே

பசியைத் தீர்த்தவளே

கண்ணீர் துடைத்தவளே

சிரிப்பை அளித்தவளே

வலிமையை உணர்தியவளே

கருணையில் மலர்ந்தவளே

உன் கனவை நிகழ்த்தி

உன் அன்பைச் செலுத்தி

உலகை உயர்த்தியவளே

உன் பெண்மை என்றும் வெல்க! வெல்க!

**அபிராமி க**

**இளம் கணினி அறிவியல், முதலாமாண்டு**

## பெண்மை வெல்க

இருள் சூழ்ந்த உலகில்
மங்காத புகழைக் கொண்டு வந்த
புதுமைப் பெண்ணின் புதிரே!

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
முழக்கத்தின் சொந்தக்காரரே!

கும்மிகள் பல கொட்டி
பெண்வர்கத்தை வெளிக்கொணர்ந்த
கவிஞனே!

புரியாத புதிரே!
விடியலின் புதையலே!
பெண் இனத்தைக் காக்க வந்த பேரழகனே!

அடிமைத்தனத்திலிருந்து

அண்ணாந்து பார்க்கும் அளவிற்கு
உலகை வியக்க வைத்த
தமிழ் எழுத்தாளனே!

**அபிராமி. வெ**

**முதுகலைத் தமிழ், இரண்டாமாண்டு**

## வியக்கவைக்கும் கவிஞன்

எண்ணத்தை எழுத்தாக மாற்றிய
எழுத்தாளனே!
புதுமைப் பெண்
படைத்த பாவலனே!
கட்டுப்பாட்டைக் கலைந்த
கவிஞனே!
பெண் இனம் காக்க வந்த
பெண்ணியவாதியே!
மண்ணில் புதைந்த புதையலைப் போலே!
மங்கையரின் மங்காத புகழை
அறிந்த மாமேதையே!

அடிமைத்தனத்திலிருந்து மீண்டு
பட்டங்கள் சட்டங்கள் கொண்டு
வானில் பறக்கின்றனர்
ஆணும் பெண்ணும் சமம் என்று கூறி
சமத்துவத்தைக் கொண்டு வந்த
சமூகச் சீர்திருத்தவாதியே!
பெண்மை வெல்க என
முழக்கமிட்ட முடியரசனே!
முடிவில் உன் எழுத்து போராட்டம்
எல்லோரையும் வியக்க வைத்தது!

**சா. பவித்ரா**

**முதுகலைத் தமிழ், இரண்டாமாண்டு**

## மனதில் உறுதி வேண்டும்

நிரந்தரமில்லா இந்த உலகம்
ஒரு காவியம்
தொடக்கத்தில் சிரிப்புடன் தொடங்கும்
இறுதியில் அழுகையுடன் நிறைவடையும்

வாழ்க்கயை அதன் ஓட்டத்தில் கடந்து
கழிப்பதே அழகு
மாறாக எதிர் நீச்சல் என்றால்
எஞ்சிய வாழ்வும் நரகமாகும்
ஓடுபாதையில் தடைகற்கள் என்றால்
துணிந்து முன்னேறு
நல்லதொரு வாழ்வை வாழ
அனைத்தையும் கடந்திடுவோம்
பாரதி வழியில்
மனதில் உறுதி கொண்டு

**மை. விண்ணரசி**

**முதுஅறிவியல் கணிதவியல், முதலாமாண்டு**

## பெண்மை வெல்க

உலகில் எங்கும் நிறைந்த ஒளியாய்
முத்து மாலையென ஒளிரும்
பெண்ணின் கண்ணியம்

மின்னல் போல வெற்றிக் காற்று வீசம்
மண்ணின் மேல் நிழல் காட்டும்

பெண்மை வேளாண் நிலம் போல
வளர்ச்சியும் பெருமையும் தழைக்கும்
கண்ணெதிர் எழும் சூரியன் போல
நம்பிக்கை நிதானமும் பெண்ணின் மாயை

உலகின் இசை ஓசை ஆகட்டும்
என்றும் ஒளியாய் நிலைக்கட்டும்
பெண்மை வெல்க எனும் கவி

**அ.ச. மிருதுளா ஸ்ரீ**
**கணினி அறிவியல், முதலாமாண்டு**

**முன் பக்க அட்டை ஓவியம்:**
**பா. சந்தியா**
**கணினிப் பயன்பாட்டியல், இரண்டாமாண்டு**

# துறை நிகழ்வுகள்

## மகாகவி நாள் போட்டிகள் – 11.09.2024






# கவிதைப் பயிலரங்கம் – 01.10.2024





# மகாகவி

# பிறந்தநாள் விழா

# போட்டிகள் – 11.12.2024



# நற்றமிழ்க்குடில்

மாணவ இலக்கிய மின்னிதழ்







**தமிழ்த்துறை**
சோகா தமிழ்ப் பேரவை
வெளியீடு

சோகா இகெதா கலை
மற்றும் அறிவியல்
மகளிர் கல்லூரி
சேது பாஸ்கரா நகர்
மாதனாங்குப்பம்
சென்னை 600 099.

044-26863177
9677717455, 9677717456

sokatamilavai2023@gmail.com
sokaikeda2000@gmail.com

டிசம்பர் 2024
குடில் 7
விருந்து 23